மாலை முரசு
பக்கங்கள் 17+ 03
முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 07 சனிக்கிழமை 21.06.2024 | அதிர்வு 322

## ஜூன் 30 ஆம் திகதி விசேட சபை அமர்வு



எதிர்வரும் 30 ஆம் திகதி விசேட நாடாளு மன்ற அமர் வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்

### செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரும்

# ‘அணையா விளக்கு’ போராட்டத்துக்கு தமிழரசு பேராதரவு

## அனைவரும் அணிதிரளுமாறு சுமந்திரன் பகிரங்க அழைப்பு

(ந.லோகதயாளன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்குச் சர்வதேச நீதி கோரியும், சர்வதேசக் கண்காணிப்புடன் மனிதப் புதைகுழி அகழ்வை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியும் ‘மக்கள் செயல்’ என்கின்ற தன்னார்வ இளையோர் அமைப்பால் எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரையில் செம்மணி வளைவுப் பகுதியில் ‘அணையா விளக்கு’ என்ற பெயருடன் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கு இலங்கைத் தமிழரசுக் 03



# மனிதப் புதைகுழியை வைத்து அரசியல் இலாபம் தேடாதீர்கள்

## தமிழ்த் தரப்பை மிரட்டுகின்றார் சரத் வீரசேகர



யாழ். செம்மணியில் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியை வைத்து தமிழ்த் தரப்பினர் அரசியல் இலாபம் தேட முயல்வதை நிறுத்த வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர வலியுறுத்தியுள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்கில் கண்டுபிடிக்கப்படும் அனைத்து மனிதப் புதைகுழிகளுக்கும் இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்துவது தமிழ்த் தரப்பினரின் வழமை. முதலில் புதைகுழியில் இருந்து மீட்கப்படும் 03



# ஜனாதிபதி நிதியத்தின் சேவைகள் பரவலாக்கப்பட்டமை வடக்கு மக்களுக்குக் கிடைத்த மிகப் பெரும் வரப்பிரசாதம்

## ஆளுநர் வேதநாயகன் நன்றி தெரிவிப்பு







"ஜனாதிபதி நிதியத்தின் சேவைகள் பிரதேச மட்டத்துக்கு பரவலாக்கப்பட்டமை எமது வடக்கு மாகாண மக்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். இது முக்கியமான மைல்கல். இதற்காக எமது மாகாண மக்கள் சார்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளைப் பிரதேச செயலக மட்டத்துக்கு விரிவாக்கும் நிகழ்சித் திட்டத்தின் வடக்கு மாகாணத்துக்கான ஆரம்ப நிகழ்வு கிளிநொச்சி மாவட்டசெயலகத்தில் இன்று சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கடற்றொழில் மற்றும் நீர்வள மேம்பாடு அமைச்சர் இ.சந்திரசேகரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட செயலர் சு.முரளிதரன் வரவேற்புரையை நிகழ்த்தினார். தொடர்ந்து ஜனாதிபதி நிதியத்தின் சேவைகள் தொடர்பில் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளரும் ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளருமான சி.ரொஷான் தெளிவுபடுத்தினார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர்,

"நான் பிரதேச செயலராகப் பணியாற்றிய போர்க்காலத்தில் – 1991ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் – மக்கள் மருத்துவத் தேவைக்காக கொழும்புக்கு அலைய வேண்டும். அதுவும் இதற்கு விண்ணப்பித்து நீண்ட காலம் காத்திருக்க வேண்டும். இந்த அலைச்சல் வீண் செலவுகள் எல்லாம் இப்போது இல்லாமலாக்கப்பட்டிருக்கின்றது. இது எமது மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம்.

அரச சேவை என்பது மக்களுக்கு விரைவாக கிடைக்கப் பெற வேண்டியது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக அது மக்களுக்கு கிடைக்கப் பெறுகின்றது. மக்கள் தமது பிரதேச செயலகங்கள் ஊடாக விரைவாக தமக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும். தனித்து மருத்துவ தேவைக்காக மாத்திரமல்லாது, ஜனாதிபதி நிதியத்தின் ஏனைய சேவைகளையும் வடக்கு மாகாண மக்கள் இன்றிலிருந்து பிரதேச செயலகங்கள் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

மக்கள் நம்பிக்கை வைக்கக் கூடியதாக அரச சேவையை மாற்றியமைக்க வேண்டும் என ஜனாதிபதி அடிக்கடி குறிப்பிடுவார். அது உண்மை. இன்று மக்கள் மத்தியில் அவ்வாறானதொரு நிலைமை இல்லை. இன்று ஆரம்பிக்கப்படும் இந்தச் சேவைகள் ஊடாக அதை மாற்றியமைப்பதற்கு அரச அதிகாரிகள் முன்வரவேண்டும்." – என்றார்.

இதன் பின்னர் அமைச்சர் இ.சந்திரசேகர், "பல விடயங்கள் கடந்த காலங்களில்கொழும்பைமையப்படுத்தியிருந்த நிலையில் அதை மாகாணத்தை நோக்கிப் பரவலாக்கியிருக்கின்றோம். அதன் ஓர் அங்கமாக ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளைக் குறிப்பிட முடியும்." – என்றார்.

இதனைத் தொடந்து ஜனாதிபதி நிதியத்தினூடாக வழங்கப்படும் புலமைப்பரிசில் மற்றும் வேறு சேவைகளை இணைய வழிமுறையூடாகச் செயற்படுத்தும் திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்கள், ஜனாதிபதி நிதியத்தின் மேலதிக செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## ரி - 56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும்

# தோட்டாவுடன் இந்தியப் பிரஜை கட்டுநாயக்கவில் இன்று கைது!

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தோட்டாவுடன் இந்தியப் பிரஜை ஒருவர் விமான நிலையப் பொலிஸாரால் இன்று சனிக்கிழமை காலை கைது செய்யப் பட்டுள்ளார்.

30 வயதுடைய இந்தியப் பிரஜையே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் குவைத்தில் இருந்து இன்று காலை 6.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.



இதன்போது விமான நிலையப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேகநபர் கொண்டு வந்த பயணப் பொதியில் இருந்து ரி – 56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப் படும் தோட்டா ஒன்று கைப்பற்றப்பட் டுள்ளது.

சந்தேகநபர் குவைத்தில் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தார் எனவும், பணியில் இருக்கும் போது தரையில் விழுந்து கிடந்த தோட்டா ஒன்றை இவ்வாறு எடுத்து வந்தார் என வும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பொலிஸாரால் நடவ டிக்கை எடுத்துள்ளனர்.

---

## ‘அணையா விளக்கு’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி முழு ஆதரவைத் தெரிவித்துள் ளது .

“இந்தப் போராட்டத்தில் எமது கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனை வரையும் அணிதி ரண்டு பங்கேற்குமாறும் மிகவும் அன்போடு வேண்டிக்கொள்கின் றேன்.” – என்று தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத் தரணி எம்.ஏ.சுமந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

அம்பாறையில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

“ஐ.நா. மனித உரிமைகள் பேரவை யின் ஆணையாளர் தற்போது இலங்கை வரக் கூடாது என நூற்றுக்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் அவரிடத்தில் வேண்டியிருந்தன. ஆனாலும் அதையும் மீறி அவர் இலங்கை வருகின்றார். அப்படியான சூழலில் அவருடைய வரு கையில் விசேடமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி சம்பந்த மான விடயங்களில் அவர் கரிசனை செலுத்த வேண்டும்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசு பின்னிற்பதை அவதானித்து அதற்கான தனது கருத்துக்களை சொல்ல வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரிடம் நாம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம். அவரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை யும் கேட்டிருக்கின் றோம்.

விசேடமாக யாழ்ப்பாணம் – செம் மணியில் மனிதப் புதைகுழி திரும்பவும் அகழப்படுகின்றது. அதில் மிகவும் மோச மான விடயங்கள் வெளிவந்து கொண்டி ருக்கின்றன. பெண்கள், குழந்தைகள் உட்பட பலரின் மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்படுகின்றன.

இதேநேரம் சில அமைப்புக்கள், செம்மணிப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரி ‘அணையா விளக்கு’ என்ற பெயரில் மூன்று தினங்கள் தொடர் போராட்டத்தை நடத்தவுள்ளதாக அறிவித்துள் ளன. இந்தப் போராட்டத்தில் எமது கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர் கள் அனைவரையும் அணிதி ரண்டு பங்கேற்குமாறும் மிகவும் அன்போடு வேண்டிக்கொள் கின்றேன்.

இது எங்களது தேசத்துக்கு – எங்களது மக்களுக்கு மிகவும் முக்கியமான ஒரு போராட்டம். உண்மைகள் வெளிவர புதைகுழி தோண்டப்பட வேண்டிய விடயம் பகிரங்கமாகச் செய்யப்பட வேண் டும். இதனை ஐ.நா. போன்ற அலுவலகங்கள் மேற்பார்வை செய்ய வேண்டும்.” – என்றார்.

---

## மனிதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித எலும்புக்கூடுகள் உண்மையில் யாருடையவை என்பது பரிசோதனைக ளின் மூலம் கண்டறியப்பட வேண்டும்.

ஏனெனில் வடக்கில் போர் மற்றும் அசாதாரண நிலைமைகளின்போது தமிழ் மக்களும் இறந்தார்கள், முஸ்லிம் மக்களும் இறந்தார்கள், சிங்கள மக்க ளும் இறந்தார்கள், விடுதலைப்புலிகளும் இறந்தார்கள், இராணுவத்தினரும் இறந் தார்கள்.

தற்போது மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகள் தமிழ் மக்களுடையவை என்றால் அவர்கள் ஏன் உயிரிழந்தார்கள் என்பதை ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

வடக்கில் போரில் மாத்திரம் தமிழ் மக்கள் இறக்கவில்லை. விடுதலைப்புலி களின் சித்திரவதைகளின்போதும் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். எனவே, எல்லாவற்றுக்கும் இராணுவத்தினர் மீதும், கடந்த அரசுகள் மீதும் குற்றஞ் சாட்டுவதைத் தமிழ்த் தரப்பினர் தவிர்க்க வேண்டும்.

யாழ். செம்மணியில் தற்போது கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியை வைத்து தமிழ்த் தரப்பினர் அரசியல் இலாபம் தேட முயல்கின்றனர் என்பதே உண்மை. இந்தச் செயலை அவர்கள் நிறுத்த வேண்டும்.

முதலில் அந்தப் புதைகுழியில் உள்ள மனித எலும்புக்கூடுகள் யாருடையவை என்பதும், அவர்கள் ஏன் உயிரிழந்தார்கள் என்பதும் பரிசோதனைகளின் மூலம் கண்டறியப்பட வேண்டும்.” – என்றார்.

---

## ஜுன் 30...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 11 ஆவது பிரிவுக்கு அமைய அரசால் நிதி செயல்நுணுக்கக் கூற்று ஜுன் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் அறிவிக் கப்பட வேண்டும் என்ற தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கிலேயே இவ்வாறு நாடாளுமன்றம் கூடவுள்ளது.

இதற்கு அமைய நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 16 இற்கு அமைய பிரதமரினால் விடுக்கப்படும் கோரிக கைக்கு அமைய சபாநாயகரினால் நாடாளுமன்றம் ஜுன் 30 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்குக் கூட்டப்பட வுள்ளது. இது தொடர்பில் ஆளும் கட்சியால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு விவாதத்தை பிற்பகல் 4.30 மணி வரை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், ஜுலை மாதம் 8, 9 மற்றும் 11ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தைக் கூட்டுவது பற்றிய தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது.

# தாயும் மகளும் வெட்டிக்கொலை

## அனுராதபுரத்தில் கொடூரம்

வீட்டில் தனியாக வசித்து வந்த தாயும், மகளும் கூரிய ஆயுதங்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொடூர சம்பவம் அனுராத புரம், கலன்பிந்துனுவெவை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய தாயும், 23 வயதுடைய மகளுமே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி இருவரின் சடலங்களும்



வீட்டில் இருந்து நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலைக்குப் பயன்படுத்திய கூரிய ஆயுதங்களையும் வீட்டில் இருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கொலைச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கொலையாளிகள் எனச் சந்தேகிக்கப்படும் அயல்வீட்டின் உரிமையாளர் உட்பட மூவரைக் கைது செய்துள்ள பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




### வவுனியா மாநகர சபையில்

# குடியிருப்புக்களுக்கான ஆதன வரி எட்டு வீதமாகக் குறைக்கப்படும்!

### மாநகர மேயர் காண்டீபன் தெரிவிப்பு

**(கி.வசந்தன்)**

வவுனியா மாநகர சபைக்குட்பட்ட குடியிருப்புக்களுக்கான ஆதனவரியை 8 சதவீதமாகக் குறைப்பதற்கு எதிர்பார்ப்பதுடன், குடியிருப்பைத் தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு 10 சதவீதமாக அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக வவுனியா மாநகர மேயர் சு.காண்டீபன் தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாநகரத்துக்குட்பட்ட மக்கள் தங்களது முறைப்பாடுகளை இலகுவாக வழங்குவதற்காக வட்சப் செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் தங்களது பிரச்சினைகளைக் குறுந்தகவல்கள் மூலமாக அனுப்பினால் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

0713247247 என்ற இலக்கத்தின் மூலம்பொதுமக்கள் 24 மணிதியாலமும் எம்மைத் தொடர முடியும். ஜூலை முதலாம் திகதி முதல் அந்த நடவடிக்கை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும். மூன்று மொழிகளிலும் குறித்த சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அத்துடன், எமது சபைக்குட்பட்ட பகுதியில் தனியான தீயணைப்புப் பிரிவு ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அது தொடர்பாக நீண்ட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம். அதே போல் அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் மக்களுக்கான சிறந்த பொதுவான ஒரு பாதீட்டை இம்முறை சமர்ப்பிப்போம்.

அத்துடன் யாழ். மாநகர சபையானது குடியிருப்புக்களுக்கான ஆதன வரியாக 8 சதவீதத்தை அறவிடுகின்றது. அதே போல் ஏனைய இடங்களுக்கு 10 சதவீதம் அறவிடுகின்றது. எனவே, முதற்கட்டமாக அதே தொகையை நாங்களும் அறவிடுவதற்குத் தீர்மானித்துள்ளோம். எமது கன்னி அமர்வில் இது தொடர்பான விடயம் இறுதி செய்யப்படும்.

அண்மைய தினங்களில் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், இந்தியத் துணைத் தூதுவருடன் வவுனியா மாநகர அபிவிருத்தி தொடர்பான ஆரம்ப கட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன், அது தொடர்பாக திட்ட முன்மொழிவுகளும் தயாரிக்கப்படுகின்றன. யாழ். மாநகர மேயர், துணை மேயர் மற்றும் ஆணையாளருடன் மாநகர சபை செயற்பாடுகள் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடியிருந்தேன்."

– என்றார்.



## வடக்கு சுகாதார, சுதேச மருத்துவ, சிறுவர் பராமரிப்பு:

# இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பில் ஆராயும் கலந்தாய்வு



வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை (20) நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், நிதிகளை உரிய காலத்தில் செலவு செய்ய வேண்டும் என்றும், ஜனாதிபதியும் அதை வலியுறுத்தியுள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் சுகாதார திணைக்களம், சுதேச மருத்துவ திணைக்களம், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களம் ஆகிய ஒவ்வொரு திணைக்களங்களதும் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்வுகளும் வழங்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் – நிதி, திட்டமிடல், சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்கள ஆணையாளர், ஒவ்வொரு மாவட்டங்களதும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், கட்டடங்கள் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# எமனாகும் விபத்துகள்

இந்த ஆண்டில் இன்னும் அரையாண்டு முழுமையாகப் பூர்த்தியாகவில்லை. அதற்கிடையில் இதுவரை 1,133 சாலை விபத்துகளில் சுமார் 2,000 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் சாலை பாதுகாப்பு துறைக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக ஹபுகோட தெரிவித்துள்ளார். 2024 ஆம் ஆண்டில் சுமார் 2,141 சாலை விபத்துகளில் சுமார் 2,243 பேர் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் சாலை விபத்து இறப்புகளின் எண்ணிக்கை ஒரு நாளைக்கு சராசரியாக ஏழு பேர் ஆக இருந்தது. போகின்ற போக்கில் இந்த ஆண்டு இது மிக அதிகமாக இருக்கும்.

தினசரி சாலை விபத்துகள் குறித்து மனதை ஆழமாக அச்சுறுத்தும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நேற்று முன்தினம் திடீரென - எழுந்தமானமாக, ஹட்டன் - கண்டி வீதியில் முன்னெடுத்த வாகன சோதனையைத் தொடர்ந்து அரச போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருக்கும் பதினைந்து பஸ்கள், தனியார் பஸ்கள் உட்பட சுமார் 44 வாகனங்களை வீதிகளிலிருந்து விலக்கியுள்ளது.

சுமார் 115 வாகனங்கள் இந்த வீதிச் சோதனைக்கு எழுந்தமானமாக உட்படுத்தப்பட்டதப்பட்ட போதே அதில் 44 வாகனங்கள் - அதாவது 38 வீதமானவை - வீதிப் போக்குவரத்துக்குத் தகுதியற்றவை எனக் கண்டறியப்பட்டது. இதுவே நாட்டின் ஒட்டுமொத்த சாலைப் போக்குவரத்து நிலைமையின் ஒருவெட்டுமுகப் படமாகக் கருதப்படலாம்.

கொழும்பு தேசிய மருத்துவமனை எலும்பியல் சேவைகள் துறையின் இயக்குநர் டாக்டர் இந்திகா ஜாகோடா, சாலை விபத்து இழப்புகளை 'அமைதியான தொற்றுநோய்' என்று பெயரிட்டு அழைக்கின்றார்.

உயிர்ப்பலியை வாங்கும் - அதிக வேதனையையும் விசனத்தையும் ஏற்படுத்தும் - வருடாந்தம் பல்லாயிரம் பேரை குறுகிய காலத்துக்கும், பல நூறு பேரை நிரந்தரமாகவும் ஊனமாக்கும் - இந்தப் பிணி, டெங்கு மற்றும் பிற நோய்களைப் போல பொதுமக்களின் கவனத்தைப் பெறுவதில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வீதி விபத்துகளின் விளைவுகள் அரசு நடத்தும் மருத்துவமனைகளில் கடுமையான அழுத்தத்தை - நெருக்கடியை - ஏற்படுத்துகின்றன. வைத்திய சாலைகளில் இருந்து பொலிஸ், நீதி மன்றங்கள் வரை அவை ஏற்படுத்தும் பொருளாதார மற்றும் சமூகச் செலவுகள் மிகப்பெரியவை. தாங்க முடியாதவை.

இலங்கையில் வருடாந்திர தனிநபர் விபத்து இறப்புகள் அதிக வருமானம் கொண்ட நாடுகளின் சராசரி விகிதத்தை விட இரண்டு மடங்கு உயர்ந்தது என்றும், உலகின் சிறப்பாகச் செயல்படும் நாடுகளை விட ஐந்து மடங்கு அதிகம் என்றும் உலக வங்கி அறிக்கை கூறுகிறது. தெற்காசிய பிராந்தியத்தில் தனது உடனடி அண்டை நாடுகளிடையே இலங்கை மிக மோசமான சாலை விபத்து இறப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

தகுதியற்ற வாகனங்கள், அதிவேகம், கவனச்சிதறல்கள், பொறுப்பற்ற தன்மை, சோர்வு, மது அல்லது போதைப்பொருளின் செல்வாக்கின் கீழ் வாகனம் ஓட்டுதல், மோசமான வானிலை, சாலைகளின் மோசமான நிலைமைகள், தேவையான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் இல்லாமை, முறையற்ற சடுதியான பாதை மாற்றங்கள், ஓட்டுநர்களின் அனுபவமின்மை, ஆபத்தான முறையில் முந்திச் செல்வது, மோசமான தெரிவுநிலை, சரியான - தெளிவான - பாதைக் குறியீடுகள் இல்லாமை மற்றும் பொறுமையின்மை அல்லது நேர அழுத்தம் போன்ற காரணிகளில் ஒன்று அல்லது அவற்றில் பலவற்றின் கலவை எந்தவொரு சாலையிலும் ஆபத்தான விபத்துகளுக்கு வழிவகுக்கும்.

எனவே, சாலை விபத்துகளைத் தடுப்பதற்கான எந்தவொரு உத்தியின் வெற்றியும் இந்த காரண காரணிகளை நிவர்த்தி செய்வதில்தான் தங்கியுள்ளது.



# காரைதீவு பத்ரகாளியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம்!

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜுலை மாதம் 02 ஆம் புதன் கிழமை நடைபெறவுள்ளது.

அதன்படி எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை கும்பாபிஷேகத்துக்கான கிரியாரம்பம் இடம்பெறும்.

ஜுலை 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை முதல் எண்ணைய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

மறுநாள் 02 ஆம் திகதி புதன் கிழமை மகா கும்பாபிஷேகம் காலை 9 மணியளவில் கிழக்கின் பிரபல சிவாச்சாரியார் சிவாச்சார்யதிலகம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் நடைபெறும்.

ஆலய பூசகர் க.பாஸ்கரன் உதவியுடன் இடம் பெறும் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிஷேகம் இடம் பெறும். ஜுலை 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபையினர் இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்.




# இ.போ.ச. பஸ் மோதி ஓட்டோ சாரதி சாவு!

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் ஓட்டோவின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இரத்தினபுரியில் குருவிட்ட, கதன்கொட பிரதேசத்தில் இன்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பூந்தோட்டம் - பெரியார்குளம் வீதிக்கு காப்பற் இடும் பணிகள் இன்று ஆரம்பம்

**(கி.வசந்தன்)**

வவுனியா, பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இருந்து பெரியார்குளம் முருகன் ஆலயம் வரையான 1200 மீற்றர் நீளம் கொண்ட வீதிக்குக் காப்பற் இடும் பணிகள் இன்று ஆரம்பித்து வைக் கப்பட்டன.

கிராமப் புற வீதிகள் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் இந்தப் பணிக்காக அண்ணளவாக 11 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாநகர சபையின் வட்டார உறுப்பினர் சி.கிருஷ்ணதாஸின் கோரிக் கைக்கு அமைய தேசிய மக்கள் சக்தி யின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனின் ஒழுங்குபடுத்தலில் இந்த வீதி புனரமைக்கப்படுகின்றது.

நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பி னர் ம.ஜெகதீஸ்வரன் வீதி அமைக்கும் பணியை உத்தியோகபூர்வமாக ஆரம் பித்து வைத்தார்.

நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர் சி.கிருஸ்ணதாஸ், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் சிரேஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் பிரேமரஞ்சன், கிராமத்தின் பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# கதிர்காமம் பாத யாத்திரை பயணம் உகந்தைக் காட்டு வழிப்பாதையில்!

## பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனைக்குத் தடை விதிப்பு



(பாறுக் ஷிஹான்)

வரலாற்று சிறப்பு மிக்க கதிர்காம திருத்தலத்துக்கான பாத யாத்திரைக்காக குமுண தேசிய பூங்கா உடான காட்டு வழிப்பாதை நேற்று (20) அதிகாலை உகந்தை மலை தேவஸ்தானத்தில் இடம்பெற்ற விஷேட பூசை வழிபாடுகளை தொடந்து திறந்து வைப்பட்டதை அடுத்து பக்தர்கள் தமது காட்டுப் பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இதே வேளை கதிர்காம பாத யாத்திரையின் போது வனப் பூங்கா மற்றும் வன விலங்குகளை புகைப்படம் எடுத்தல் மற்றும் ட்ரோன் கேமராக்கள் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பதிவுகளுக்கு அனுமதி இல்லை என்றும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் எடுத்துச் இல்லாதிருக்குமாறும் சுற்றாடல் அமைச்சர் வைத்திய தம்மிக பட்டபெந்தி பக்தர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த முறை கதிர்காம புனித பூமியை தரிசிப்பதற்கு இந்த வருடத்தில் 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாத யாத்திரைக்காக வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பிரதாய பூர்வமாக ஒவ்வொரு வருடமும் இந்தப் பாத யாத்திரைக்காக பக்தர்கள் கலந்துகொள்வதுடன் இவ்வாறு சுற்றாடல் நேயமாக பொலித்தீன், பிளாஸ்டிக் பயன்படுத்தாது இந்த யாத்திரையை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து யால மற்றும் குமண வனப் பூங்காக்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் பாரம்பரிய பாதயாத்திரையை சூழல் நேயத்துடன் மாத்திரம் மேற்கொள்ளுமாறு இதன் போது அமைச்சர் பக்தர்களிடம் கோரிக்கை விடுத்தார். பிளாஸ்டிக் மற்றும் பொலித்தின் பாவனையின்றிய பசுமை பாத யாத்திரையாக மேற்கொள்வதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். அதன்படி இந்த முறை பாத யாத்திரையில் பங்குபற்றும் யாத்திரிகர்கள் சூழல் கட்டமைப்புக்கு மற்றும் வனப் பூங்காக்களில் வாழும் விலங்குகளின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் செயல்படுமாறும் வைத்தியர் தம்மிக பட்டபெந்தி கோரிக்கை விடுத்தார்.

பாதயாத்திரைக்காக குமண மற்றும் யால பூங்காக்கள் ஊடாக பயணிக்கும் யாத்திரிகர்களுக்காக பாதுகாப்பை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கப்படும் என்று வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரஞ்சன் மாறசிங்க குறிப்பிட்டுள்ளார்.







# ஒலுவில் பிரதேசத்தில் வீதி நிர்மாண பணிகள் ஆரம்பம்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

ஒலுவில் 6 ஆம் பிரிவில் வாழும் மீனவர்கள், பொது மக்களின் போக்குவரத்து மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்கு இன்றியமையாத வீதியாகவுள்ள வெளிச்ச வீட்டு கடற்கரை கரையோர வீதிக்கு நிர்மானப் பணிகள் கிரவல் இட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சீ.அஹமட் அப்கர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்குத் தேசிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்டக் கரையோர பிரதேச செயலகங்களுக்கான அபிவிருத்தி குழு தவிசாளருமாகிய ஏ. ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வுக்குக் கௌரவ அதிதியாக இணைப்பாளர் எஸ்.சத்தார், அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல். ஏ.மஜீட், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.ஏ. நியாஸ், ஒலுவில் 6 ஆம் பிரிவுக்கான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். முசாதீக், கிராம உத்தியோகத்தர் எம்.ஜே.எம். வலீத் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# கிழக்கு கலாசார பணிப்பாளராக பார்த்தீபன்!

( வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக நாவிதன்வெளி அன்னமலையை சேர்ந்த சூ. பார்த்தீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை பணிப்பாளராக இருந்த சரவணமுத்து நவநீதன் ஓய்வு பெற்ற பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் முகமாகப் பார்த்தீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் நந்தலால் ஜயசேகர இவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கி வைத்தார்.





# மன்னார் மருதமடு அன்னை ஆலய திருவிழாவிற்கான ஏற்பாடுகள் பூர்த்தி!

## 400 பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மருதமடு அன்னை ஆலய ஆடி மாத திருவிழாவை முன்னிட்டு முன்னாயத்த கலந்துரையாடல் புதன்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நேசரத்தினம் அடிகளார், மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், அருட்தந்தையர்கள், அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள், இராணுவத்தினர், பொலிஸார், கடற்படை உயர் அதி காரிகள் என பலர் பங்கேற்றனர்.

மன்னார் மருதமடு திருப்பதியின் ஆடி மாத திரு விழாவுக்கான கொடியேற்றம் நாளை மறுதினம் 23 ஆம் திகதி ஆரம்பமாகி ஆடி மாதம் 2 ஆம் திகதி திருவிழா திருப்பலியுடன் நிறைவடையவுள்ளது. இந்த நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல லட்சக் கணக்கான மக்கள் வருகை தரவுள்ள நிலையில் மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு 400 பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் வருகை தரும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சுகாதாரம், குடி தண்ணீர், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.







# கற்பிட்டி பிரதேச சபைத் தவிசாளர் நுரைச்சோலை மத்திய நிலையத்துக்கு

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச சபைத் தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட ஏ.எஸ்.எம். றிகாஸ் தனது முதல் கள விஜயமாக நுரைச்சோலையில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்குச் சென்றுள்ளார். இதன்போது கருத்து தெரிவித்த தவிசாளர் ஏ.எஸ்.எம் றிகாஸ்,

தனக்கும் நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையத்துக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. அதன் அடிப்படையில் தான் கற்பிட்டி பிரதேச சபைத்



தவிசாளராக பதவி ஏற்ற உடன் எனது முதல் கள விஜயமாக இதனை தேர்ந்தெடுத்தேன்.

இந்த நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. இக்குறைபாடுகள் சம்மந்தமாக சம்மந்தப்பட்ட அமைச்சுக்களுடன் ஏற்கனவே கலந்துரையாடியுள்ளேன். அவற்றுக்கான நிதிகளும் பெறப்படும். வெகு விரைவில் இந்த நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையம் சகல வசதிகளையும் கொண்டதாக அபிவிருத்தி செய்யப்படும்.– என்றார்.

விஜயத்தின் போது கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளரும் சமூகமளித் திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# நாட்டின் இன நல்லுறவுக்கு வழிசமைக்கும் ஒரு திருத்தலம் மருதமடு அன்னை ஆலயம்

## குரு முதல்வர் அருட்பணி கிறிஸ்து நேசன் அடிகளார் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மருதமடு அன்னை ஆலயம் பல லட்சக் கணக்கான மக்களை ஒன்று சேர்க்கும் ஒரு திருத்தலம். இந்த நாட்டின் இன நல்லுறவுக்கு வழிசமைக்கும் ஒரு தளமாக இருக்கின்றது என்று மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி கிறிஸ்து நேசன் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மருதமடு அன்னையின் ஆடிப் பெருவிழாவை முன்னிட்டு மன்னார் மாவட்ட செயலகத்தில் இதற்கான ஆய்த்தக் கலந்துரையாடல் மன்னார் அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இதன் பின்னர் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி கிறிஸ்து நேசன் அடிகளார் ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மருதமடு அன்னையின் ஆடிப்பெருவிழா இவ்வருடமும் (2025) வழமைபோன்று நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இதற்கான ஆயத்தக் கூட்டம் நடைபெற்றது.



மருதமடு அன்னையின் இந்த ஆடிமாதப் பெருவிழா எதிர்வரும் 23. ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நவநாள்கள் வழிபாடுகள் நடைபெறும்.

ஜூலை முதலாம் திகதி (01.07.2025) மாலை 06 மணிக்கு 'வெஸ்பர்' ஆராதனையும் இதைத் தொடர்ந்து ஜூலை 2 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுத்தலும் இடம்பெறும்.

இந்த மருதமடு விழாவுக்கான ஆயத்தக் கூட்டத்தில் மன்னார் ஆயர் கலந்து கொள்ள இருந்தபொழுதும் அவர் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டாலும் அடுத்தக் கூட்டத்தில் அவர் கலந்து கொள்ள இருப்பதாக தெரிவித்துள்ளார்.

மன்னார் மருதமடு அன்னை ஆலயம் பல லட்சக் கணக்கான மக்களை ஒன்று சேர்க்கும் ஒரு திருத்தலம். இந்த நாட்டின் இன நல்லுறவுக்கு வழிசமைக்கும் ஒரு தளமாக இருக்கின்றது.

இந்த திருத்தலத்துக்கு இந்த நாட்டிலுள்ள எல்லா மதத்தினரும் தமிழ், சிங்கள மக்களும் ஒன்று சேர்ந்து வருவது வழமை.

ஆகவே இந்த வருடமும் மக்கள் எவ்வித சிரமமுமின்றி இவ்விழாவில் பங்கேற்க ஏற்பாடுகள் மேற்கொள் எப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு கத்தோலிக்க திருச்சபையிலே கிறிஸ்து பிறந்து 2025 ஆண்டு யூபிலி ஆண்டாக இருப்பதால் இந்த ஆடிப் பெருவிழா ஒரு சிறப்பான ஆண்டாகவும் அமைந்துள்ளது.

ஆகவே மக்கள் இந்த விழாவுக்கு வருகை தந்து அன்னையின் ஆசீரை பெற்றுச் செல்ல வேண்டும் என வேண்டி நிற்கின்றோம்.- என்றார்.

# கிழக்கு பாலர் பாடசாலை பணியகத்தில் கல்வி சார்ந்தவர்களை நியமியுங்கள்!

## கிழக்கு மாகாண ஆளுநரிடம் இம்ரான் எம்.பி. கோரிக்கை

(ஹஸ்பர் ஏ.எச்.)



கிழக்கு மாகாண பாலர் பாடசாலை பணியகத்தின் முகாமைத்துவத்துக்கு நேரடி அரசியல் சாராதோரை நியமிக்கவும், கல்வித்துறை தொடர்புள்ளவர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், கிழக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு ஆளுநருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிழக்கு மாகாண பாலர் பாடசாலை சட்டத்தின்படி இப்பணியகத்துக்கு முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். மாகாண அமைச்சர் இல்லாத காரணத்தால் ஆளுநரால் இந்த முகாமைத்துவ குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றார்கள்.

பாலர் பாடசாலை பணியகத்தின் அம்பாறை மாவட்ட செயலாற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டவர் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று இப்போது பிரதேச சபையொன்றின் தவிசாளராக நியமனம் பெற்றுள்ளார் என்று தெரிய வருகின்றது. கல்வி நிர்வாகத்தில் நேரடி அரசியல் தொடர்புள்ளவர்கள் இருப்பது பொருத்தமானதல்ல என்பதை தாங்களும் ஏற்றுக் கொள்வீர்கள்.

அதேபோல கல்வித்துறை தொடர்பில்லாதவர்கள் இப்பணியகத்தின் முக்கிய பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளதால் அவர்களால் சரியான நிர்வாக நடவடிக்கைகள் முன்னெடுக்க முடியாதுள்ளது என்று எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் பாலர் பாடசாலை ஆசிரியைகளும், உத்தியோகத்தர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிழக்கு மாகாணப் பாலர் பாடசாலைகள்தான் கிழக்கு மாகாணத்தின் எதிர்காலக் கல்வியை நிர்ணயிப்பவை. எங்களை விட கல்விப் பாண்டித்தியமும், கல்வி நிர்வாகத் திறனும் கொண்ட தாங்கள் இதனை மறுக்க மாட்டீர்கள் என நம்புகிறேன்.

எனவே, கிழக்கு மாகாணப் பாலர் பாடசாலை மாணவர்களின் உயரிய நலனைக் கருத்தில் கொண்டு பாலர் பாடசாலை பணியக முகாமைத்துவக் குழுவை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.- என்றார்.



# சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பயிற்சி பட்டறை

(ஹஸ்பர் ஏ.எச்.)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் கல்வி அமைச்சும் இணைந்து முன்னெடுக்கும் பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழு வேலைத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக் கான சான்றிதழ் வழங்குதல் மற்றும் அதிபர்களுக்கான பயிற்சி கருத்தரங்கு மூதூர் பிரதேச செயலாளர் எம். முபாரக் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மூதூர் வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்வி பணிப்பாளர் ஹாபிஸ், முறைசாரா கல்வி பிரிவு உதவி கல்வி பணிப்பாளர் ஐஹார் , மாவட்ட செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் ஆகியோரின் பங்கு பற்றலுடன் மூதூர் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மு.சாபியின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நிகழ்வில் வளவாளராகக் கலந்து கொண்ட மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் மு.மு.ஸம்ஸித்தால் சிறுவர் பாதுகாப்பு குழுவின் செயற்பாடுகள், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்களின் வகிபாகம் போன்ற பல விடயங்கள் குறித்து தெளிவூட்டல்கள் இதன்போது வழங்கப்பட்டன.









# பரதநாட்டிய அரங்கேற்றம்!

"சுந்தரேசர் கலைக்கோவில்", "பரதநாட்டிய நன்மணி" ஸ்ரீமதி சுகன்யா நித்தியானந்தனின் மாணவியும் தஷிந்தன் பஞ்சநாதன், திருமதி தீபா தஷிந்தன் தம்பதியின் புதல்வியுமான ஸ்வேஷ்மா தஷிந்தனின் பரதநாட்டிய அரங்கேற்றம் திருகோணமலை தென்கயிலை ஆதீனம், குருமகா சந்நிதானம், தவத்திரு அகத்தியர் அடிகளார் முன்னிலையில் எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை மாலை கொள்ளுப்பிட்டி பிஷப் கல்லூரி அரங்கில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்துகொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராக பரத கலாலயா ஸ்தாபக இயக்குனர் சுபத்திரா கிருபாகரன், யாழ். ஞானோதயம் கலா மன்றத்தின் இயக்குனர் வாசுகி முகுந்தன், நாட்டிய கலா மந்திர் ஸ்தாபக இயக்குனர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் நிர்தனா நடனப் பள்ளியின் இயக்குநர் கலைமாமணி சிவாநந்தனி ஹரிதர்ஷன், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன், வத்தளை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சமிலா ரூபசிங்க ஆகியோர் கலந்து கொள்வர்.



# பருத்தித்துறையில் ‘மறுமலர்ச்சிக்காக பாதை’ தேசிய மக்கள் சக்தியின் திட்டம் ஆரம்பம்!

தேசிய மக்கள் சக்தியின் மறுமலர்ச்சி யுகத்தை முன்னெடுக்கும் முக்கிய கட்டமாக, “மறுமலர்ச்சிக்காக பாதை” எனும் கிராமப்புற வீதிகள் அபிவிருத்தித் திட்டத்தின் முதல் கட்டம் இன்று (20) பருத்தித்துறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 1,000 கிராமப்புற வீதிகள் மேம்படுத்தப்படவுள்ளன. அதன் முதல் கட்டமாக 55 கிராமிய சாலைகள் தற்போது அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இதற்காக 14 பில்லியன் ரூபாவும், மேலும் 5 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதால், மொத்தமாக 19 பில்லியன் ரூபா இந்தத் திட்டத்துக்கு வழங்கப்படுகின்றது.

இன்றைய நிகழ்வில், பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத்தெரு வீதி திட்டத்தின் ஒரு பகுதியாக தெரிவு செய்யப்பட்டு, அதன் அபிவிருத்தி பணிகள் இன்று யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மேலும், ஜனாதிபதி அநுர குமார திஸ்ஸநாயக்க, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சர் விமல் ரத்நாயக்கா, கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோர் வடக்கு மக்களுக்கு வழங்கும் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டினார்.

வடமராட்சி மக்களுக்குப் பிரதிநிதியாக நான் முழுமையாக அர்ப்பணிக்கிறேன். எமது தேசிய மக்கள் சக்தியின் அபிவிருத்திப் பாதையில் மக்கள் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும் என்று உறுதி கூறிய அவர், வளர்ச்சிக்கு எல்லா சமூகங்களையும் ஒன்று சேருமாறு அழைப்பு விடுத்தார்.

இந்த நிகழ்வில் போக்குவரத்து அமைச்சின் மேலதிக செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாண பணிப்பாளர், துறைசார் அதிகாரிகள், தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர்கள், இணைப்பாளர்கள், பருத்தித்துறை நகர சபை தவிசாளர், செயலாளர், உறுப்பினர்கள், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







## உலகை இணைத்த யோகா;

# யோகா தின நிகழ்வில் பிரதமர் மோடி உரை

சர்வதேசயோகாதினத்தைமுன்னிட்டு, இன்று ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் கடற்கரையில் மாபெரும் அரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில் இன்று காலை பிரதமர் நரேந்திர மோடி, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண், அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மற்றும் சினிமா, வர்த்தக பிரமுகர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், பொதுமக்கள் என சுமார் 3 லட்சத்துக்கும் அதிகமானோர் பங்கேற்று யோகாசனங்கள் செய்தனர்.

இந்த நிகழ்வில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்.

"உள் அமைதி உலகளாவிய கொள்கையாக மாறும் நாளாக சர்வதேச யோகா தினம் இருக்கட்டும். யோகா என்பது வெறும் தனிப்பட்ட பயிற்சியாக மட்டுமல்லாமல், உலகளாவிய கூட்டாண்மை மற்றும் ஒற்றுமைக்கான சக்திவாய்ந்த கருவியாகவும் ஏற்கப்பட வேண்டும். யோகாவை கூட்டு நல்வாழ்வுக்கான பங்களிப்பாக ஒவ்வொரு தேசமும் ஏற்க வேண்டும்.


உடல் பருமன் என்பது இன்று சர்வதேச அளவில் பெரிய சவாலாக உள்ளது. யோகா மூலம் 10 சதவீத உடல் பருமனைக் குறைக்கலாம் என 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் நான் சொல்லி இருந்தேன். இந்த சவாலை மக்கள் ஏற்க வேண்டுமென இந்நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 2014 இல் ஜூன் 21ஆம் திகதியை சர்வதேச யோகா தினமாக ஐ.நா அறிவித்தது. அதன் பின்னர் இந்த 11 ஆண்டுகளில் 174 நாடுகளில் யோகா ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்படி உலகத்தை யோகா இணைத்துள்ளது." என்றார்.

காலை சுமார் 6 மணி அளவில் இந்த யோகா பயிற்சிகள் தொடங்கின. ஆந்திர மாநிலம் முழுவதும் அந்தந்த மாவட்ட தலைநகரங்கள் மற்றும் முக்கிய நகரங்களிலும் யோகா பயிற்சி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவற்றின் மூலம் ஒரே நேரத்தில் சுமார் 5.5 லட்சம் பேர் வரை யோகா செய்து உலக சாதனை படைக்கப்பட்டது. பிரதமர் உட்பட வி.வி.ஐபிக்கள் வருகையால் விசாகப்பட்டினத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பிரதமர் மோடி இந்த நிகழ்வில் யோகாசனம் செய்தார்.

சர்வதேசயோகாதினத்தை முன்னிட்டு இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களில்மக்கள்பலரும்ஒன்றாக இணைந்து யோகா செய்தனர். இதில் பல்வேறு மாநில ஆளுநர்கள், முதல்வர்கள், அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்றனர். தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி மதுரையில் உள்ள பள்ளி ஒன்றில் யோகா பயிற்சி செய்தார். புதுச்சேரியில் கடற்கரை சாலையில் புதுச்சேரி ஆளுநர் கைலாஷ்நாதன் மற்றும் முதல்வர் ரங்கசாமி ஆகியோர் யோகா பயிற்சி நிகழ்வில் பங்கேற்றனர்.



# காட்டாட்சியை அகற்றியதால் பிஹார் மாநிலம் வளர்கிறது

## பிரதமர் மோடி கருத்து

பிஹாரில் காட்டாட்சியை அகற்றிய மக்கள், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவு அளித்தனர். இதன்காரணமாக பிஹார் அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிஹார் மாநிலம், சிவானில் நேற்று நடைபெற்ற அரசு நலத்திட்ட விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். அப்போது 5,200 கோடி ரூபா மதிப்பிலான திட்டங்களை அவர் தொடங்கிவைத்தார். சில திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

பிஹாரின் மர்ஹோராவில் அமைந்துள்ள டீசல் ரயில் இன்ஜின் ஆலையில் கினியா நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ரயில் இன்ஜின் தயாரிக்கப்பட்டு உள்ளது. இந்த ரயில் இன்ஜினை பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கி வைத்தார். அந்த விழாவில் அவர் உரையாற்றுகையில்,

"பிஹாரில் காட்டாட்சியை (லாலு ஆட்சியை) அகற்றிய மக்கள், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதன்காரணமாக பிஹார் அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு பிஹார் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. அன்றைய காட்டாட்சி காலத்தில் பிஹாரின் அனைத்து வளங்களும் சூறையாடப்பட்டன. மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருந்தது. பிஹார் இளைஞர்கள் வேலை தேடி பல்வேறு மாநிலங்களுக்கு இடம்பெயர்ந்தனர். இப்போது பிஹாரில் இருந்து வெளிநாட்டுக்கு ரயில் இன்ஜின் ஏற்றுமதி தொடங்கி உள்ளது.

மத்தியிலும் பிஹாரிலும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி நடத்துகிறது. இரட்டை இன்ஜின் அரசால் பிஹாரில் மக்கள் நலத்திட்டங்கள் விரைவாக செயல்படுத்தப்படுகின்றன. முதல்வர் நிதிஷ்குமார் பிஹாரை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்துகிறார்.



தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் நாடு முழுவதும் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீட்கப்பட்டு உள்ளனர். இதில் பிஹாரில் மட்டும் 4.75 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சி நடத்தியபோது ஏழைகள், பரம ஏழைகளாக மாறினர். பிஹாரில் காங்கிரஸ்– ராஷ்டிரிய ஜனதா தளம் கூட்டணி ஆட்சி நடைபெற்றபோது அனைத்து துறைகளிலும் ஊழல் வியாபித்து பரவியிருந்தது. நாள்தோறும் புதிய ஊழல்கள் வெளிவந்து கொண்டே இருந்தன.

இப்போது தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் ஊழல் ஒழிக்கப்பட்டு, வளர்ச்சி திட்டங்கள் வேகம் பெற்றுள்ளன. அனைத்து தரப்பு மக்களும் சரிசமமாக வளர்ச்சி அடைந்து வருகின்றனர். பிஹாரை சேர்ந்த சில அரசியல் கட்சிகள் தங்கள் குடும்பங்களின் நலனில் மட்டுமே அக்கறை செலுத்தி வருகின்றன. அதற்கு நேர்மாறாக தேசிய ஜனநாயக கூட்டணி மக்களின் நலனில் அக்கறை செலுத்துகிறது.

ராஷ்டிரிய ஜனதா தள தலைவர்கள், அம்பேத்கரை அவமரியாதை செய்துள்ளனர். அதற்காக அவர்கள் இதுவரை மன்னிப்பு கோரவில்லை. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை அவர்கள் மதிக்கவில்லை. அம்பேத்கரை அவமதித்தவர்களுக்கு பிஹார் மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள்." என்றார்.







# இஸ்ரேல் மீது ஈரான் அதிபயங்கர தாக்குதல்; கொத்து குண்டுகள் வீசியதால் பெரும் சேதம்

இஸ்ரேல் - ஈரான் போர் நேற்று 8ஆவது நாளாக நீடித்த நிலையில், இஸ்ரேல் மீது ஈரான் கொத்து குண்டுகளை வீசி அதிபயங்கர தாக்குதலை நடத்தியது. இதனால், தலைநகர் டெல் அவிவ் உட்பட பல்வேறு நகரங்களில் பிரம்மாண்ட கட்டடங்கள் சேதமடைந்தன.

அணு ஆயுத தயாரிப்பை ஈரான் தீவிரப்படுத்துவதாக கூறி, அந்நாட்டின் மீது இஸ்ரேல் தாக்குதலை தொடங்கியது. இதற்கு ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது. இரு நாடுகள் இடையிலான போர் நேற்று 8 ஆவது நாளாக நீடித்தது. இந்த தாக்குதல்களால் இருதரப்பிலும் அதிக அளவில் உயிர் சேதம், பொருள் சேதம் ஏற்பட்டுள்ளது. ஈரானில் இராணுவ உயர் அதிகாரிகள், மூத்த அணு விஞ்ஞானிகள் உட்பட 224 பேர் உயிரிழந்தனர். இஸ்ரேலில் 25 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், இஸ்ரேலின் மத்திய பகுதிகளில் மக்கள் அதிகம் வசிக்கும் இடங்களை குறிவைத்து ஈரான் கடந்த 19 ஆம் திகதி கொத்து (கிளஸ்டர்) குண்டுகளை வீசியதாக, அமெரிக்காவில் உள்ள இஸ்ரேல் தூதரகம் தெரிவித்தது. சுமார் 8 கிலோ மீற்றர் சுற்றளவு வரை கடும் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய கொத்து குண்டுகளை இஸ்ரேல் மீது ஈரான் பயன்படுத்துவது இதுவே முதல்முறை. ஈரான் வீசிய கொத்து குண்டுகளால், இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் உட்பட பல்வேறு பகுதிகளில் பிரம்மாண்ட கட்டடங்கள் சரிந்து கிடப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இஸ்ரேலின் துறைமுக நகரமான ஹைபா மற்றும் டான் மாவட்டங்கள் உட்பட பல பகுதிகள் மீது ஈரான் நேற்று சரமாரியாக ஏவுகணைகளை வீசியது.

சைரன் ஒலி எழுப்பியதும் மக்கள் பதுங்கு குழிகளிலும், வணிக வளாகங்களின் கார் பார்க்கிங் பகுதிகளிலும் சென்று பதுங்கினர். ஈரான் வீசிய ஏவுகணைகள் பல கட்டடங்கள் மீது விழுந்து வெடித்தன. பீர் சேவா நகரில் உள்ள மைக்ரோசாஃப்ட் அலுவலக கட்டடம் மீது ஈரான் ஏவுகணை விழுந்து வெடித்ததில், பலர் காயம் அடைந்தனர். இரு நாடுகள் இடையே பதற்றத்தை தணிக்கும் விதமாக, ஜெனிவாவில் நடைபெறும் பேச்சு வார்த்தைக்கு வருமாறு ஈரான் வெளியுறவு துறை அமைச்சர் அப்பாஸ் அராகசிக்கு ஐரோப்பிய நாடுகளின் அதிகாரிகள் அழைப்பு விடுத்துள்ளனர். இரு நாடுகளும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுமாறு பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் அமைச்சர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

போர் நீடித்து வரும் நிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அவசர கூட்டத்தை கூட்டுமாறு ஈரான் மற்றும் அதற்கு ஆதரவு தெரிவிக்கும் ரஷ்யா, சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. இதனால், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் 2 ஆவது அவசர கூட்டம் விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.





## வடக்கு ஈரானில் நில அதிர்வு பதிவு

வடக்கு ஈரானில் 5.1 மெக்னிடியூட் அளவிலான நிலஅதிர்வு ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

செம்னான் மாகாணத்திலிருந்து தென்மேற்கே 37 கிலோ மீற்றர் தொலைவில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலஅதிர்வினால் எந்த உயிர்ச் சேதமோ பொருள் சேதமோ ஏற்படவில்லை என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலஅதிர்வு தெஹ்ரானிலும் உணரப்பட்டதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



பக்கம் 03
கனடா முரசு
சனிக்கிழமை 21/06/2025

## இஸ்ரேலில் சிக்கிக் கொண்ட கனடிய ஹொக்கி வீரர் டிமொத்தி

கனடிய ஹாக்கி வீரர் ஒருவர் இஸ்ரேலில் சிக்கிக் கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

"நான் ஹாக்கி விளையாட வந்தேன் – ஆனால் இப்போது குண்டு சத்தங்களுக்கு நடுவில் உயிர் பாது காப்பிற்காக

02

# பிஷ்னோய் கும்பலை தீவிரவாத இயக்கமாக அறிவிக்குமாறு பிராம்ப்டன் மேயர் கோரிக்கை



இந்தியாவை தளமாகக் கொண்டுள்ள லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலை தீவிரவாத அபமைப்பாக அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பிராம்ப்டன் மேயர் பாட்ரிக் ப்ரவுன் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்தக் கும்பலின் மோசமான செறய்பாடுகள் பீல் பகுதியிலேயே வேரூன்றியுள்ளதாகவும், பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

02

# மொண்ட்ரியல் நகரில் நடைபெறும் வருடாந்த கனடா தின பேரணி ரத்து



கனடாவில் மொண்ட்ரியல் நகரில் நடைபெறும் வருடாந்த கனடா தின பேரணி இந்த ஆண்டும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக நிகழ்கிறது.

தொடர்ந்து ஏற்படுகிற திட்டமிடல் குழப்பங்கள் மற்றும் நகர சபை ஊழியர் வேலைநிறுத்தங்கள் தான் இவ்வாண்டு நிகழ்வு நடைபெறாததற்கான முக்கிய காரணங்கள் என பேரணியின் பிரதான ஏற்பாட்டாளர் நிக்கோலஸ் கவுன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டும் இதே பேரணி ரத்து செய்யப்பட்டிருந்தது. எனினும், மொண்ட்ரியல் நகரம் அதனை மறுத்து, அவரிடமிருந்து எந்த அனுமதி கோரிக்கையும் பெறவில்லை என தெரிவித்தது.

1977 இல் தொடங்கிய இந்த பேரணி, ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பார்வையாளர்களை கவர்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

பேரணியைத் திட்டமிடுவதில் கடந்த சில ஆண்டுகளில் தொடர்ந்து அதிக தடைகள், குழப்பங்கள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க அலுமினியம் மீது புதிய வரி; கனடா பிரதமர் மார்க் கார்னி திட்டவட்டம்





அமெரிக்க எஃகு மற்றும் அலுமினியம் மீது புதிய வரி விதிக்கப்படும் என கனடா பிரதமர் மார்க் கார்னி திட்டவட்டம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கனடா பிரதமர் மார்க் கார்னி கூறுகையில்,

“எதிர்வரும் 30 நாள்களுக்குள் கனடாவும், அமெரிக்காவும் ஒரு ஒப்பந்தம் மேற்கொள்வது தொடர்பான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஒப்புக்கொண்டன. பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படும்போது அதனை மதிப்பாய்வு செய்து எங்களது பதிலை தெரிவிப்போம்.

நியாயமற்ற அமெரிக்க வரிகளில் இருந்து கனடா தொழிலாளர்கள் மற்றும் வணிகங்களை பாதுகாக்க வேண்டும். அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்துக்கு ஏற்ப ஜூலை 21 ஆம் திகதி அமெரிக்க எஃகு மற்றும் அலுமினிய பொருள்கள் இறக்குமதிகளுக்கு புதிய வரிகள் விதிக்கப்படும்.” என்றார்.

## பிஷ்னோய் கும்பலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கனடா அரசாங்கம் அந்தக் குழுவை தீவிரவாத அமைப்பாக பிரிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

பிஷ்னோய் கும்பலை தீவிரமான குற்றவாளிகளின் அமைப்பு என பிரவுன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

ப்ரவுனின் இந்தக் கோரிக்கை, பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதல்வர் டேவிட் எபி இதே கோரிக்கையை முன்வைத்த சில நாள்கள் கழித்து வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலில் சிக்கிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஓடிக்கொண்டு இருக்கிறேன்.” என 29 வயதான கனடா ஹாக்கி வீரர் டிமொத்தி பேய்ன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் எலீட் ஹாக்கி லீக் (IEHL)-ல் ஜெருசலேம் கேப்பிடல்ஸ் அணிக்காக விளையாடும் அவர், கடந்த வாரம் தான் இஸ்ரேலுக்கு சென்றுள்ளார்.

ஆனால் அதைத் தொடர்ந்து ஈரானுடன் தொடங்கிய போரால், தோற்றுப் போனவனாக உணர்கிறார் என அவர் தெரிவித்துள்ளார்.

“இரவு 11, 12 மணிக்கு எச்சரிக்கை சைரன்கள் ஒலிக்கத் தொடங்குகிறது.


எங்கள் வீடு அருகே குண்டு விழுந்தது. சாளரங்கள் உடைந்தன, சுவர்கள் இடிந்தன,” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

“நாங்கள் தங்கிய வீட்டில் குண்டு புகலிடமும் இல்லை. வீதிக்கு 200 மீற்றர் தூரத்தில் உள்ள இடத்துக்கு ஒவ்வொரு இரவும் ஓடிச் செல்ல வேண்டியுள்ளது,” என பேய்ன் தெரிவித்துள்ளார்.

டிமொத்தி பேய்ன் போன்றே மேலும் 14 கனடிய வீரர்களும் ஹாக்கி லீக் போட்டியில் விளையாட இஸ்ரேல் சென்று சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.






# மிசிசாகாவிலுள்ள பாடசாலையில் மாணவர்களை தாக்கிய ஆசிரியர்

கனடாவின் மிசிசாகாவிலுள்ள ஒரு பாடசாலை ஆசிரியர், நான்கு மாணவர்களை தாக்கி, ஒரு அறையில் கட்டாயமாக அடைத்தார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

அட்வாடர் அவென்யூ மற்றும் காவ்த்ரா சாலை பகுதியில் உள்ள பள்ளியில் 2024 - 2025 கல்வியாண்டில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்த ஆசிரியர் நான்கு மாணவர்களை ஒரு அறைக்கு அழைத்து சென்று, அவர்கள் வெளியேற முடியாத வகையில் தடுத்து வைத்திருந்தார் என பொலிஸ் குறிப்பிட்டுள்ளது.

இந்த விசாரணையின் அடிப்படையில், 36 வயதான டேவிட் சைபல்ஸ்கி என்ற ஆசிரியர் மீது நான்கு தாக்குதல் குற்றச்சாட்டுகள் மற்றும் நான்கு கட்டாய அடைப்பு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவர் சிறையில் வைக்கப்படாமல் சில நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளதோடு, எதிர்வரும் நாள்களில் பிராம்ப்டனில் உள்ள நீதிமன்றத்தில் முன்னிலையாக உள்ளார்.

மேற்படி ஆசிரியர் தற்போது பணியிலிருந்து இடைநீக்கம்செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தின் தன்மை மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, மேலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கக்கூடும் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# 8 ஆண்டுகளுக்கு முன் காணாமல் போன பெண்ணின் உடல் பாகங்கள் மீட்கப்பட்டன



கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில், சிக்கமஸ் பகுதியில் இருந்து 2017 இல் காணாமல் போன நிக்கோல் கிறிஸ்டல் பெல் என்பவர் உயிரிழந்துள்ளார் என செய்யப்பட்டுள்ளது.

2025 மே 5 ஆம் திகதி, பிரிட்டிஷ் கொலம்பியாவின் சால்மன் ஆம் பகுதியில் உள்ள ஒரு புறநகர் நிலத்தில் மனித உடற்கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்பின், பிரிட்டிஷ் கொலம்பியா மரண விசாரணை சேவை அந்த உடற்கூறுகள் 31 வயதான நிக்கோல் பெல்லின் சடலம் என உறுதி செய்தது.

நிக்கோல் பெல் 2017 செப்டம்பரில் காணாமல் போனதிலிருந்தே, இந்த வழக்கை முக்கிய குற்றவியல் விசாரணை பிரிவு இந்த விசாரணைகளை முன்னெடுத்திரந்திருந்தது.

பொலிஸார் அதை சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகளில் நடந்த கொலை எனத் தீர்மானித்துள்ளனர்.